# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2016

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 8

சுட்டெண்:

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

01. தமிழின் செம்மையைச் சுட்டும் பெயர்

அ) பைந்தமிழ் ஆ) தீந்தமிழ் இ) செந்தமிழ் ஈ) தேன்தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

02. காளமேகப்புலவருடன் பந்தியிலே உணவு உண்டவர்

அ) உழவர் ஆ) புலவர் இ) பார்ப்பான் ஈ) கவிஞர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

03. ஆங்கிலேயப் படைகளை எதிர்த்த பண்டாரவன்னியனின் படைத்தலைவர்

அ) கதிர்காமநாயகம் ஆ) குலசேகரம் முதலியார்

இ) தப்புலன் ஈ) தொண்டைமான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

04. சென்றான் என்ற சொல்லின் இடைநிலை

அ) ல் ஆ) ற் இ) ன் ஈ) இன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

05. **குறள்:-** நிறைநீர நீரவர் ________________ பிறைமதிப்

பின்நீர பேதையார் நட்பு

அ) தண்மை ஆ) உண்மை இ) கேண்மை ஈ) வண்மை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

06. ஒருவரின் தன்மைபற்றி அறிதலைக் குறிக்கும் மரபுத்தொடர்

அ) நாக்குத்தெறிக்கப் பேசுதல் ஆ) ஆழம்பார்த்தல்

இ) தலைகவிழ்தல் ஈ) தோள்கொடுத்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

07. பலவின்பாலிற்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) பாடினான் ஆ) பறந்தன இ) ஓடினான் ஈ) கூறியது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

08. பண்டாரவன்னியனை நினைவுபடுத்தும் கல்வெட்டு உள்ள இடம்

அ) முள்ளியவளை ஆ) திருகோணமலை

இ) பண்டாரிக்குளம் ஈ) கற்சிலைமடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

09. நான்காம் வேற்றுமை உருபு

அ) கு ஆ) ஐ இ) ஆல் ஈ) ஆன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. கழுதை கத்தும். அது போல் குதிரை

அ) முழங்கும் ஆ) பிளிறும் இ) கீச்சிடும் ஈ) கனைக்கும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. பழந்தமிழர் ________________ அடிப்படையாகக் கொண்டு தமது வாழ்வியலையும் அறிவியலையும் அமைத்துக் கொண்டனர்.

அ) காற்றையும் மழையையும் ஆ) வானத்தையும் மழையையும்

இ) ஞாயிற்றையும் திங்களையும் ஈ) வானத்தையும் மண்ணையும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. பின்வருவனவற்றுள் நிகழ்காலப் பெயரெச்சம்

அ) ஓடிய ஆ) ஓடும் இ) ஓடுகின்ற ஈ) ஓடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. இராசராசசோழன் சனநாதமங்களம் என இலங்கையின் தலைநகரை மாற்றிய இடம்.

அ) அநுராதபுரம் ஆ) மன்னார் இ) கொழும்பு ஈ) பொலநறுவை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. உறவினர் குறைபாராட்டலாகாது என்னும் பொருளைக் குறிக்கும் பழமொழி

அ) குற்றம்பார்க்கிற் சுற்றமில்லை.

ஆ) நிழலின் அருமை வெய்யிலில் தெரியும்.

இ) அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.

ஈ) துள்ளின மாடு பொதி சுமக்கும்.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. 'சோழருக்கும் பாண்டியருக்கும் ஏற்பட்ட போரில் பாண்டியருக்குப் படையுதவி அனுப்பிய சிங்கள மன்னன்

அ) துட்டகெமுனு  ஆ) மகிந்தன்

இ) ஐந்தாம் காசியப்பன்  ஈ) விசயபாகு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. குன்று மெல்லமெல்லச் சரிந்து வந்து நிலத்துடன் இணையும் இடம்

அ) மடு  ஆ) சாரல்  இ) கழிமுகம்  ஈ) தூறல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. **மாரி விளைந்தது**. இது

அ) பொருளாகுபெயர்  ஆ) இடவாகுபெயர்

இ) குணவாகுபெயர்  ஈ) காலவாகுபெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. கி.பி 1017ஆம் ஆண்டு பாண்டியரது முடியையும் அணிகலன்களையும் கைப்பற்றுவதற்காக இலங்கைமீது படையெடுத்த மன்னன்

அ) இராசராசசோழன்  ஆ) இராசேந்திரசோழன்

இ) பராந்தகசோழன்  ஈ) குலோத்துங்கசோழன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. இன்று மழை பெய்யுமோ? இதில் வந்துள்ள இடைச்சொல்

அ) உம் ஆ) ஓ இ) மழை ஈ) இன்று

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. கமுகின் இளையது பிள்ளை போல் பனையின் இளையது

அ) வடலி ஆ) நாற்று இ) கன்று ஈ) குட்டி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. 1811ஆம் ஆண்டில் நடைபெற்ற போரில் பண்டாரவன்னியன் விழுப்புண்பட்ட இடம்

அ) உடையாவூர் ஆ) மன்னார்

இ) ஆனையிறவு ஈ) முள்ளியவளை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. கடுமை + போர் என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) கடுமைபோர் ஆ) கடும்போர்

இ) கடுபோர் ஈ) கட்போர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. என்தமிழர் மூதாதை! என்தமிழர் பெருமான்! எனப் பாவேந்தர் குறிப்பிடுவது

அ) குமணனை ஆ) அதியர்மானை

இ) எல்லாளனை ஈ) இராவணனை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. இலையின் சருகுக்கு முந்திய பருவம்

அ) கொழுந்து ஆ) பழுப்பு இ) தளிர் ஈ) இலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. உள்ளம் தூய்மையடைவது இதனால் என வள்ளுவர் கூறுகிறார்.

அ) பொய்யால் ஆ) ஒளியால் இ) வாய்மையால் ஈ) கல்வியால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. **நெற்கதிர்** இப்புணர்ச்சி

அ) தோன்றல் ஆ) திரிதல் இ) கெடுதல் ஈ) இயல்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று

அ) புறநானூறு ஆ) திருக்குறள் இ) கலித்தொகை ஈ) அகநானூறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. உண்ணாநோன்பிருந்து உயிர் நீத்த அன்னைபூபதி தோன்றிய இடம்

அ) களுவாஞ்சிக்குடி ஆ) ஏறாவூர்

இ) ஆரையம்பதி ஈ) புல்லுமலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. அச்சம் தவிர்த்தால் அறிவு ஓங்கும் எனக் கூறியவர்

அ) உருத்திரமூர்த்தி ஆ) பாரதியார்

இ) தாமோதரம்பிள்ளை ஈ) அழ.வள்ளியப்பா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. நிகழ்ச்சியொன்றை மேடையேற்றுவதற்கு முன் நடத்திப் பார்ப்பது

அ) அரங்கேற்றம் ஆ) முற்றுகை இ) வெள்ளோட்டம் ஈ) ஒத்திகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

மாந்த நாகரிகம் வளர்ச்சியடைந்த காலத்திலிருந்தே தமிழர் தங்கள் பாரம்பரிய தொழில்களாகப் பல தொழில்களைச் செய்து வருகின்றனர். நெசவுத் தொழில், உழவுத்தொழில், மட்பாண்டத்தொழில் போன்றவை அவற்றுள் சிலவாகும். சுட்டகளிமண்ணிலிருந்து செய்யப்படும் கலங்களை மட்பாண்டம் எனக் கூறுவர். சட்டி, பானை என்பன இவற்றுள் அடங்கும். இத்தொழில் செய்வோரை குயவர் என அழைப்பர். இன்று மண்ணினால் செய்யப்படும் மட்கலங்கள் மக்கள் மத்தியில் அருகிக் கொண்டே வருகின்றன. அன்று மட்பாண்டங்களில் மட்டுமே உணவு சமைக்கப் பழகிக் கொண்ட மாந்தவினம் இன்று அவற்றை மறந்து வருவது கவலைக்குரியதொன்றாகும். மட்கலங்களில் சமைத்த உணவை உண்பது, அதிலுள்ள நீரைப் பருகுவது உடல் நலத்திற்கு உகந்தது என ஆய்வாளரும் எமது முன்னோரும் கூறுகின்றனர். இவற்றால் பல நோய்களிலிருந்து மாந்தவினம் தப்பித்துக் கொள்ள முடியும் எனவும் கூறப்படுகிறது.

1. தமிழருடைய பாரம்பரியத் தொழில்கள் எவை?

2. மட்பாண்டம் செய்வோரை எவ்வாறு அழைப்பர்?

3. உடல்நலத்திற்கு உகந்தவை எவை என ஆய்வாளரும் நமது முன்னோரும் கூறுகின்றனர்?

4. சுட்டகளிமண்ணிலிருந்து செய்யப்படும் கலங்களை எவ்வாறு கூறுவர்?

5. மட்பாண்டங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழில் - ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. அதியர்மான் எந்நகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான்?
   அவன் தமிழுக்குத் தந்த கனி யாது?

2. பண்டாரவன்னியனின் வரலாற்றோடு தொடர்புடைய இரண்டு ஊர்களின் பெயர்களைத் தருக.

3. கிறித்தவநெறி சார்ந்த இலக்கியங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

4. **குறள்:-** *எல்லா விளக்கும் விளக்கல்லச் சான்றோர்க்குப்*
   *பொய்யா விளக்கே விளக்கு*
   இக்குறளின் பொருளைத் தருக.

5. ஆங்கிலேயருக்கு எதிராக பண்டாரவன்னியன் மறைந்திருந்து படைதிரட்டிய இடம் எது?

6. நட்பின் சிறப்புகள் இரண்டைத் தருக.

7. இலங்கையின் கடைசிச் சோழமன்னன் யார்?

**புள்ளிகள் 10**

4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை முழுமை ஆக்குக.

# உயர்ந்திடுவோம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்றாய் | எண்ணிடுவோம் | நன்மை | உயர்ந்து | உலக |

பெற்றோர் தம்மைப் பேணிடுவோம்

கற்றோருடனே சேர்ந்திடுவோம்

அறங்கள் பலவும் கற்றிடுவோம்

அதனால் ____________________ பெற்றிடுவோம்

நன்று தீது அறிந்திடுவோம்

நாளும் ____________________ இணைந்திடுவோம்

குற்றங்குறைகளைக் களைந்திடுவோம்

குணத்தால் ____________________ சிறந்திடுவோம்

பிறருக்கென்றும் உதவிடுவோம் - அது

பெருமை என்று ____________________

____________________ மக்களின் மனங்களிலே

உயர் வாய் நாமும் நிலைத்திடுவோம்

**புள்ளிகள் 10**

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

   தோன்றா எழுவாய்:

   ______________________________

   தோன்றாச் செயப்படுபொருள்:

   ______________________________

2. முல்லைபோன்ற சிரிப்பு என்பதில் இடம் பெற்றுள்ள உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பவற்றைத் தருக.

   உவமானம் :- ______________________________

   உவமேயம் :- ______________________________

   பொதுத்தன்மை:- ______________________________

3. கூட்டுச்சொல்லியம், கலப்புச்சொல்லியம் ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.

   கூட்டுச்சொல்லியம் :-

   ______________________________

   கலப்புச்சொல்லியம் :-

   ______________________________

4. தரப்பட்டுள்ள சொற்களுடன் பின்வரும் வேற்றுமை உருபுகளைப் புணர்த்தி எழுதுக.

| சொற்கள் | 2ஆம் வேற்றுமை உருபு | 3ஆம் வேற்றுமை உருபு | 4 ஆம் வேற்றுமை உருபு |
|---|---|---|---|
| சேயோன் | | | |
| நான் | | | |

5. பின்வரும் மரபுச்சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

   குபுகுபு :- ______________________________

   ஈனஇரக்கம் :- ______________________________

**புள்ளிகள் 15**

## 6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Facebook is important means of communication. We communicate one another via Facebook. We exchange important news with others. We send photos taken on birthdays, wedding days and any other important occasions to face book. Our relatives and friends who live faraway enjoy looking at these pictures. Face book is a good hobby for everyone.

Facebook ist ein wichtiges Kommunikationsmittel. Wir können mit Hilfe von Facebook kommunizieren. Wir können wichtige Nachrichten mit anderen teilen. Wir können mit Facebook Bilder von Geburtstagen, Hochzeiten und anderen wichtigen Anlässen senden. Unsere Verwandten und Freunde die weiter weg wohnen freuen sich über diese Bilder. Facebook ist für jeden ein gutes Hobby.

Facebook er en vigtig kommunikation . Vi kommunikerer med hinanden gennem facebook. Vi deler vigtige nyheder med andre. Vi sender billeder fra fødselsdage, bryllupper samt fra vigtige begivenheder til facebook. Vores familier, som bor langt væk, nyder at se disse billeder. Facebook er en god fritidsaktivitet for alle

Facebook is belangrijk communicatiemiddel. We communiceren met elkaar via facebook. We wisselen belangrijk nieuws met anderen. We sturen foto's gemaakt op verjaardagen, huwelijk dagen en alle andere belangrijke gelegenheden op facebook. onze familieleden en vrienden die ver weg wonen genieten van het kijken naar deze foto's. Facebook is een goede hobby voor iedereen.

Facebook è un importante mezzo di comunicazione. Noi comunichiamo tra di noi attraverso facebook. Noi scambiamo importanti informazioni con gli altri. Noi inviamo a facebook foto scattate durante compleanni, matrimoni ed altre importanti occasioni. I nostri parenti ed amici che vivono molto lontani gioiscono (sono contenti) guardando queste foto. Facebook è un buon hobby per tutti

Facebook er en viktig form for kommunikasjon. Vi kan kommunisere med hverandre på facebook. Vi kan utveksle viktige nyheter med hverandre. På facebook kan vi sende bilder fra fødselsdager, bryllup og mange andre viktige anledninger. Våre slektninger og venner som bor langt borte gleder seg over å se på disse bildene. Facebook er fin hobby for alle.

Facebook är en viktig kommunikationsmedia. Genom Facebook har vi kontakt med varandra. Vi delar viktiga nyheter med andra. Vi skickar bilder tagna på födelsedagar, bröllopsdagar och andra viktiga event till Facebook. Våra släktingar och vänner som bor väldigt långt borta kollar på dessa bilder och blir glada. Facebook är en bra hobby för alla.

Facebook est moyen de communication important. Nous communiquons avec les uns et les autres à travers Facebook. Nous partageons des informations importantes avec les autres. Nous publions des photos d'anniversaires, de mariages ou d'autres évènements sur Facebook. Etant donné que nos familles et nos amis résident très loin, ils prennent du plaisir à regarder ces photos. Facebook est un très bon divertissement pour tout le monde.

**புள்ளிகள் 05**

**7) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✯ தமிழ் இலக்கிய வளம்
- ✯ மழை நாள்
- ✯ காட்டு மல்லிகை

புள்ளிகள் 20